इंडिया रिज़र्व बैंक

**இந்திய ரிசர்வ் வங்கி**
भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
वेबसाइट: www:rbi.org.in/hindi
Website: www.rbi.org.in
ई-मेल: Email: helpdoc@rbi.org.in

संचार विभाग, केंद्रीय कार्यालय,एस.बी.एस.मार्ग, मुम्बई ४००००१
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
फोन/Phone: 91 22 2266 0502 फैक्स/Fax: 91 22 22660358

செப்டம்பர் 22, 2017

## ஜாக்ருதி கோ-ஆபரேடிவ் அர்பன் வங்கி லிட்., ஹைதராபாத், தெலங்கானா - அபராதம் விதிக்கிறது

இந்திய ரிசர்வ் வங்கி, ஜாக்ருதி கோ-ஆபரேடிவ் அர்பன் வங்கி லிட்., ஹைதராபாத், தெலங்கானா மீது ரூ. 5.00 லட்சம் அபராதம் விதிக்கிறது. இதனைப் பின்வரும் காரணத்திற்காக விதிக்கிறது. வங்கிகள் நெறிமுறைச் சட்டம் 1949-ன் கூட்டுறவு சங்கங்களுக்கும் பொருந்தும், சட்டப்பிரிவு எண் 47 A (1) (b) மற்றும் 46 (4) உடன் இணைந்த கருத்தின்படி இந்திய ரிசர்வ் வங்கிக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, வங்கி இயக்குநர்கள் மற்றும் அவர்களது உறவினர்களுக்குக் கடன்களை வழங்குவதில், வரம்பு ஆகியவை குறித்த ஆணைகள் / வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை மேற்குறிப்பிட்ட வங்கி பின்பற்றாத காரணத்தால் மேற்படி அபராதம் விதிக்கப்படுகிறது.

இந்திய ரிசர்வ் வங்கி இது குறித்து விளக்கம் கோரி அறிவிப்பினை அனுப்பியது. அதற்கு வங்கி, எழுத்துப் பூர்வமான பதிலை அளித்தது. இது குறித்த உண்மைகளையும், வங்கியின் பதிலையும் நேரில் அளித்த விளக்கங்களையும் கருத்தில் கொண்டதில், வங்கியின் அத்துமீறல்கள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டதால், அதற்கு அபராதம் தேவையென இந்திய ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது.

(அஜித் பிரசாத்)
உதவி ஆலோசகர்

**பத்திரிக்கை வெளியீடு** - 2017-2018/816